# பத்திரிக்கை செய்தி

## சான்றிதழ் வழங்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்ற சுகாதார ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.காத்தமுத்து, பிள்ளையார்கோவில் தெரு, காக்குப்பம், விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தை கடந்த 2016ம் வருடம் காலமானார். புகார்தாரர் தந்தையின் இறப்பு குறித்து எவ்விதமான பதிவும் செய்யாமலும் இறப்புச்சான்றிதழும் வாங்கவில்லை. புகார்தாரர் வாரிசுசான்றிதழ் வேண்டி விழுப்புரம் நகராட்சியில் விண்ணப்பித்தபோது புகார்தாரரின் தந்தையின் இறப்புச்சான்றிதழ் கேட்டுள்ளனர். புகார்தாரர் தான் தந்தையுடைய இறப்பிற்கு இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை என கூறியுள்ளார். இதன்பின் புகார்தாரர் கடந்த 11.03.2025ந் இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை என்பதற்கான சான்றிதழ் கேட்டு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.மதன்குமார், சுகாதார ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 18.03.2025 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.மதன்குமார், சுகாதார ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.